# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 224 ஆங்கீரச ஆடி 2 (17.07.1992) வெள்ளி


★ யாழ் அரச அதிபரிடம்

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மன்னிப்புக் கோருகிறது

யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரின் கொழும்பு பயணம் சம்பந்தமாக நிலவிய கருத்து வேறுபாடுகள் தற்போது நீங்கியுள்ளதாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்க அதிபர் கொழும்பு செல்வதற்கு கப்பலில் ஏறியபின்னர் இறக்கப்பட்ட சம்பவத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை அதிகாரிகள் நேற்று அரசாங்க அதிபரிடம் நேரில் —04 ஆம் பக்கம் பார்க்க

# பலவேகய நடவடிக்கை இலக்கு

# அதிகாரிகள் முரணான தகவல்

## ஆனையிறவுப் பாதை குறித்தும் படையினர் இறுதி முடிவு இல்லை

பலவேகய - 2 இராணுவ நடவடிக்கை குறித்து இராணுவ அதிகாரிகள் முன்னுக்குப் பின் முரணான அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றனர்,

பலவேகய - 2 நடவடிக்கை கடந்த வெள்ளியுடன் நிறைவெய்தி விட்டது படையினர் மவற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரையிலான பகுதியில் நிலைகொண்டு குடாநாட்டை துண்டித்து விட்டனர் என இராணுவப் பேச்சாளர் கேணல் முனசிங்க நேற்று தெரிவித்தார்.

எனினும் கடந்த செவ்வாயன்று கூட்டுப்படை அதிகாரி ஒருவர் பலவேகய இராணுவ நடவடிக்கை இன்னமும் நிறைவடையவில்லை என்றும் படையினர் ஆனையிறவின் தெற்காகவும் தமது நிலையை ஏற்படுத்திய பின்னரே பலவேகய -2 நடவடிக்கை நிறுத்தப்படும் என கூறியிருந்தமை நினைவிருக்கலாம்

இதே சமயம் நேற்று செய்தியாளர்களிடையே பேசிய கேணல் முனசிங்க ஆனையிறவு பாதை திறக்கப்பட்டு விட்டதாக கூறினார் எனினும் முன்னதாக ஆனையிறவு பாதை இன்னமும் திறக்கப்படவில்லை ஆனையிறவு முகாமின் வடக்கு தெற்கு பகுதிகள் படையினர் கட்டுப்பாட்டில் வந்த பின்னரே பாதையினால் பொதுமக்கள் செல்ல முடியும் என கூற்றுப் படை அதிகாரி கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்று செய்தியாளர்களிடையே பேசிய கேணல் முனசிங்க கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் இம்மாதம் 10 ஆம் திகதி வரையிலான பலவேகய-2 நடவடிக்கையில் 66 படையினர் பலியானதாக கூறினார்,

பரந்தன். கண்டாவளை புதுக்குடியிருப்பு ஊரடங்கு மறு அறிவித்தல் வரை தொடர்வதாகவும் கடனீரேரி தடைசெய்யப்பட்ட பகுதி எனவும் முனசிங்க மேலும் தெரிவித்தார்

## இந்தியாவின் 9 ஆவது ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா

இந்தியாவின் 9 ஆவது ஜனாதிபதியாக சங்கர் தயாள சர்மா தெரிவு செய்யப்பட்டுள்ளார்

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் நேற்று பிற்பகல் அறிவிக்கப்பட்டது இதன்படி காங்கிரஸ் வேட்பாளர் சங்கர் தயாள் சர்மா 64 78 சதவீத வாக்குகளை பெற்றார் இவருக்கு கிடைத்த மொத்த பெறுமதி வாக்குகள் 6 லட்சத்தி 75 ஆயிரத்தி 764 ஆகும்.

பாரதிய ஜனதா மற்றும் ஜனதா தள் கட்சிகளின் ஆதரவு பெற்ற எதிர்கட்சி வேட்பாளர் பேராசிரியர் சுவேல் 33 21 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

இவருக்கு கிடைத்த மொத்த பெறுமதி வாக்குகள் 3 லட்சத்தி 46 ஆயிரத்து 485 ஆகும்

67 வாக்குகள் செல்லுபடியற்றவையாக நிராகரிக்கப்பட்டன.

இப்போது உபஜனாதிபதியாக பதவி வகிக்கும் சங்கர் தயாள் சர்மா (75) எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார்.

## அரச அதிபர் பயணமாவார்

இன்று பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்லும் குமண கப்பலில் யாழ் அரச அதிபர், கல்விப்பணிப்பாளர் ஆகியோரும் செல்லவிருக்கின்றனர்.

இதற்கான அனுமதி கொழும்பில் இருந்து கிடைத்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன 06 47

## ஷெல் தாக்குதல்

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று பகல் பளை பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் இடம் பெற்றது,

## ஆங்கிலதினவிழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் ஆங்கில தின விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது 22

★ கல்விப்பணிப்பாளர்

## கொழும்புசென்ற பின்னரே பரீட்சை குறித்து முடிவு

யாழ் கல்விப்பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் கொழும்பு சென்று பரீட்சை ஆணையாளருடன் பேச்சு நடத்திய பின்பே க பொ த உயர்தர பரீட்சை யாழ் மாவட்டத்தில் நடத்துவது பற்றி முடிவு தெரியும் என யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

எனினும் பரீட்சை வினாத்தாள்களை விமானம் மூலமாக பலாலிக்கு கொண்டு வந்து பின்னர் கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கும் எடுத்து வரப்படுவதற்கு யாழ் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47

## செட்டிகுளம் முகாமிலிருந்து எல்லை குடியிருப்பு நோக்கிஷெல்

செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் பகல் முழுநாளும் படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஷெல்கள் மன்னார் - வவுனியா எல்லைப்புற குடியேற்றங்களில் வீழ்ந்து வெடித்தன. இதனால் இப்பகுதி மக்கள் இரவோடு இரவாக இடம் பெயர்ந்து சென்றனர்.

இப்பகுதி மக்கள் கடந்த வருட இறுதியில் இடம்பெயர்ந்து அண்மையில் தான் இப்பகுதியில் மீண்டும் குடியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

● க. பொ. த: பரீட்சை

## குமண கப்பலில் காகிதாதிகள் எடுத்து வரப்பட்டன

திருகோணமலைக்கு சென்ற குமண கப்பல் மீண்டும் நேற்று காலை 11 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் க பொ த உயர்தரப் பரீட்சைக்குரிய காகிதாதிகள் மற்றும் ஆவணங்கள் என்பன எடுத்து வரப்பட்டதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## மயிலங்கூடல் பகுதிக்கு மக்கள் செல்கிறார்கள்

கடந்த மாதம் வலிகாமம் வடக்கு பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது மயிலங்கூடல் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் தற்போது அப்பகுதியில் இருந்து வாபஸாகியுள்ளதாக வீடு பார்க்கச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

கருகம்பனை - கவுணாவத்தைப்பகுதியில் படையினர் நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த சில தினங்களாக மயிலங்கூடல் பகுதி மக்கள் தற்தமது வீடுகளைப் பார்க்கச் சென்று வருவதையும் காணமுடிகிறது

இவர்கள் தமது வெற்றிலைத் தோட்டங்களில் இருந்து வெற்றிலைகளை பறித்து வருகின்றனர்.

ஒரு சிலரின் வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் வந்தவர்கள் தெரிவித்தனர். 22

★ 19 பயணிகள் கொலை

## விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சு குழு

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கிரான் குளத்தில் 19 முஸ்லிம் பஸ் பயணிகள் கொலைசெய்யப்பட்டமை குறித்து விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது,

இத்தகவலை வெளியிட்ட இராணுவ பேச்சாளர் கேணல் முனசிங்க பாதுகாப்பு அமைச்சினால் இந்த விசாரணை ஆணைக்குழு அமைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

கப்பலில் தபால்கள் செல்வதால்

## யாழ் பிரதம தபாலகத்தில் நேற்றும் மக்கள் கூட்டம்

யாழ் பிரதம தபாலகத்தில் கடந்த மூன்று தினங்களாக பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வெளியூர் தபால்களை அனுப்புவதற்கு திரண்டு வந்திருக்கக் காண முடிந்தது,

அதேபோல முத்திரைகள் வாங்குவதற்கும்பதிவுத் தபால்கள் அனுப்புவதற்கும் நீண்ட வரிசையில் நின்றதையும் காணமுடிந்தது, — 04 ஆம் பக்கம் பார்க்க

## சவர்க்காரங்கள் கைப்பற்றப்பட்டன

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் பலரிடமிருந்து பதுக்கிவைக்கப்பட்ட பெருமளவு சவர்க்காரங்கள் நேற்று முன்தினம் தமிழீழ காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன.

இவை நியாய விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. 51

★ லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

## திருநாவுக்கரசு கைதாகி விடுதலை

முன்னாள் தமிழக அமைச்சரும் அண்ணா புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் மக்கள் முன்னேற்ற கழக தலைவருமான திருநாவுக்கரசு நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் பின்னர் இவர் மாலையில் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்,

முன்னர் வீட்டுவசதித்துறை அமைச்சராக திருநாவுக்கரசு பதவி வகித்தபோது மாடி கட்டிடங்களை நிர்மாணிப்பதான திட்டத்தில் 21 கோடி ரூபா லஞ்ச ஊழல் புரிந்த — 04 ஆம் பக்கம் பார்க்க

★ அமைச்சர் மன்சூர் குற்றச்சாட்டு

# கிழக்கில் இராணுவத்தின் நிலை திருப்திகரக்கூடியதாக இல்லை

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இராணுவத்தினரின் பாதுகாப்புக் கடமைகள் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இல்லை என ஆளும் கட்சி அமைச்சரான நூனாப் மன்சூர் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் காலை கிரான் குளத்தில் வைத்து 19 காத்தான்குடி முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்தும் அவர் அங்கு பிரஸ்தாபித்தார்.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து மூன்று மைல் தொலைவிலேயே குருக்கள்மடம் இராணுவ முகாம் உள்ளதாகவும், எனினும் இக்கொலைகளைத் தடுக்க அவர்களால் முடியாமல் போய்விட்டதாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, உள்ளிட்ட கிழக்கு மாகாணம் படையினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளதாக அரசு அடிக்கடி கூறி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடி முஸ்லிம்களே கொல்லப்பட்டவர்கள்

கிழக்கில் நேற்று முன்தினம் காலை கிரான்குளத்தில் முஸ்லிம்கள் பயணம் செய்த பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த எட்டுப்பேர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நேற்று கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கிறது.

இச்சம்பவத்தில் 19 முஸ்லிம்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டமை தெரிந்ததே.

கொல்லப்பட்ட முஸ்லிம்கள் காத்தான்குடியைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகின்றன.

## விசாரணை நடத்துமாறு முஸ்லிம் காங்கிரஸ் கோருகிறது

கிரான்குளத்தில் நேற்று முன்தினம் 19 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவம் பற்றி உடனடியாக பாரபட்சமற்ற விசாரணை நடத்த உத்தரவிடுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

இதேவேளை இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட 19 முஸ்லிம்களினதும் ஜனாசா நல்லடக்கம் நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி பள்ளிவாசலில் இடம்பெற்றது.

## தொண்டாவின் நிலை குறித்து ஆளுங்கட்சிக் குழு ஆராய்ந்தது

மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்துப் பிரதமர் டி.பி. விஜயதுங்க தலைமையிலான குழு நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்தது.

தெரிவுக் குழுவில் ஆளுங்கட்சி சார்பில் அங்கம் வகிப்பவர்களில் ஒருவரான கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் தொண்டமான் தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து நான்கு அம்சத் திட்டத்தை ஆதரிப்பது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை பாராளுமன்றத் தெரிவுக் குழு நேற்றுக் கூடியது. இன்றும் கூடவுள்ளது.

## ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா நிதி!

ஜனசக்தித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கொள்கைத் திட்டமிடல் அமைச்சைப் பணித்துள்ளார்.

இந்த இரண்டாவது கட்டம் வசதிகள் குறைந்த குடும்பங்களை வளங்கள் நிறைந்த குடும்பங்களாக இவ்வருடம் செப்டெம்பர் 6 ஆம் திகதியிலிருந்து மாற்றியமைக்குமென அரச செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் குடும்பங்கள் தலா 25 ஆயிரம்ரூபா மூலதன நிதியை உதவியாகப் பெறும்,

வடக்கு கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில் ஜனசக்தித் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனசக்தித் திட்டத்தின்கீழ் நன்மை பெறுவதற்கு மாதமொன்றுக்கு 700 ரூபாவுக்கும் குறைவான வருமானம் பெறும் 14 இலட்சம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

இப்பணம் அரசினால் அக் குடும்பங்களின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்படும் அதற்காக அக் குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 250 ரூபா வட்டிக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

## பின்தங்கிய மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்

சரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் கல்வியில் பின் தங்கியுள்ள மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் முகமாக விசேட வகுப்புகளை வித்தியாலய அதிபர் கே. பொன்னையா ஆரம்பித்துள்ளார்.

இவ் வகுப்பில் கல்வி கற்பதற்கென 82 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவ் விசேட வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன

மூன்று ஆண்டு கல்வித் திட்டத்தின் கீழ் இவர்கள் விரைவாகக் கற்கக்கூடிய மாணவர்களாக உருவாக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது 11

## ஆங்கில ஆசிரியர் நேர்முகப்பரீட்சை

வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கும் முகமாக இப்பாடசாலைகளுக்கு இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களை பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி வடமராட்சிக் கோட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளன. (11)

## நாச்சியம்மாள் உற்சவம்

அரியாலை நாச்சியம்மாள் ஆலய வருடாந்த உற்சவம் 22 ஆம் திகதி ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. 14


### சிறுவிளம்பரம்

**புலமைப்பரிசில் பரீட்சை**

1992 (வி) உட்பட கடந்தகால வினாவிடை விற்பனையாகிறது, O/L. A/L கடந்த கால வினா விடை விற்பனையாகிறது அறிவகம், 374 மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம் 07040

**உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்**

பாவித்த தரமான மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும் உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகளும் றேடியோக்களும் வாங்கப்படும், மணிக்கூடுகள் றேடியோ, ரீ.வீ. டெக் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் எமக்கு கிளைகள் ஏதும் கிடையாது எமது புதிய முகவரி "[illegible] வாச் வேக்ஸ்" (வானவில் கூல்பார் அருகாமை - பழைய [illegible] முன்பாக) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 07047

**சோதிடம்**

கல்வி, விவாகம், தொழில் தடைகள் நீங்க, தீராத நோய், கஷ்டம், குடும்பப் பிரச்சினைகள் தீர அதிர்ஷ்டம் அழைக்கிறது பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். 07029


## ஊரடங்கு உத்தரவுக்கான காரணம் இதுவாம்

கிளாலி ஊடான கடலேரிப் பயணத்தைத் தடுப்பதற்காகவே கிளிநொச்சி, சண்டாவளைப் பகுதியிலும் மண்டைதீவு, புதுக்குடியிருப்புப் பகுதியிலும் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

இவ்வாறு கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக நேற்று வெளியான கொழும்புத் தினசரியொன்று தெரிவித்துள்ளது

## ஜனசக்தித் திட்டத்திற்கென புதிய அமைச்சு அமைப்பு

புதிதாக ஜனசக்தி அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது

இவ் அமைச்சின் அமைச்சராக உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாரச்சி நேற்றுப் பதவியேற்றார்.

தற்போதுள்ள அமைச்சுப் பொறுப்புக்களுடன் ஜனசக்தி அமைச்சராகவும் அவர் செயற்படவுள்ளார்

இதுவரை காலமும் ஜனசக்தித் திட்டம் உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்தது தற்போது அமைச்சு அந்தஸ்திற்கு அது உயர்த்தப்பட்டுள்ளது.

ஜனசக்தி அமைச்சு கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கீழ் இயங்கி வரும்.

ஜனசக்தி ஆணையாளர் திணைக்களமும், ஜனசக்தி நம்பிக்கை நிதியமும் இந்தப் புதிய அமைச்சின் கீழ் கொண்டு வரப்படும்.

தற்போதைய தபால் மா அதிபர் டி. எம். பாலசந்திரன் இப் புதிய அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கண்டி கல்விப்பணிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி

விதவைகள், அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தை சரியாகப் புரிந்து கொள்ளாத பல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் இருப்பதனால் பல இளம் விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத்தைப் பெறாமல் பலத்த சிக்கல்களின் மத்தியில் வாழ்கின்றனர் என இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டி மாகாணக் கல்விப் பணிப்பாளர் இவ்வாறு நடந்துள்ளார் எனவும் இதனால் 1989 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த புசல்லாவை சரஸ்வதி மகாவித்தியாலய ஆசிரியர் ஒருவரின் மனைவிக்கும் அவரின் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஒய்வூதியம் இதுவரை கிடைக்காதது மாத்திரமல்லாமல் அந்த ஆசிரியர் அரச பாடசாலையில் 10 வருடம் சேவை செய்யாதமையினால் அவருக்கு விதவை அநாதை ஓய்வூதியம் பெறும் தகுதியில்லையென்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறியுள்ளாராம்.

விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் பெறுவதற்கு 10 வருடம் அரச சேவை வேண்டும் என்பது முற்றிலும் பிழையென்றும், ஓய்வூதியச் சட்டதிட்டங்களைச் சரியாகப் படித்துப் புரிந்து கொண்டு தொழிற்படுமாறும் இந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் இது குறித்து கண்டி மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

அடுத்த இரு மாதங்களுக்குள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து விதவைக்கும் அநாதைக்கும் உரிய ஓய்வூதியத்தை வழங்கத் தவறின் சங்கம் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் மேல் அடிப்படை உரிமைகள் மீறல் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யுமெனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய உப ஜனாதிபதி தேர்தல் ஆகஸ்ட் 19 இல் நடைபெறும்

இந்திய ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து உப ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியிடப்படவுள்ளது

இதற்குரிய வேட்பு மனு இன்று முதல் ஏற்கப்படவுள்ளது.

ஆகஸ்ட் முதலாம் திகதி வேட்பு மனு பரிசீலனைக்கு எடுக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலுமுள்ள நியமன உறுப்பினர்களும் அனைத்து உறுப்பினர்களும் இத் தேர்தலில் வாக்களிக்க உரிமையுடையவர்கள்.

## அயோத்தி பள்ளிவாசலை காக்குமாறு பாக். கோரிக்கை

அயோத்தியிலுள்ள புராதன பள்ளிவாசல் இடிக்கப்படுவதை தனது அரசாங்கம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டாது என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார் ஆயினும் இப் பள்ளிவாசலுக்கு தீங்கு எதுவும் ஏற்படாத வகையில் இந்து ஆலயம் ஒன்று அப்பகுதியில் கட்டப்படுவது குறித்து தனது அரசு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்க மாட்டாது எனவும் நரசிம்மராவ் இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இதேவேளை அயோத்தியில் இந்து ஆலயம் கட்டுவதை நிறுத்துமாறு அலகாபாத் உயர் நீதிமன்றம் உத்தரபிரதேஷ் மாநில அரசுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆலய நிர்மாண வேலைகளைத் தொடர்வதற்கு முன்னர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது

அயோத்தியில் பள்ளிவாசல் இடிக்கப்படுவதைத் தடுக்குமாறு பாகிஸ்தான் இந்தியாவை வற்புறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம்

# ஓய்வூதியர்களுக்கு 260 ரூபா அமைச்சரவைக்கு அறிக்கை

ஓய்வூதியர்களுக்கு (ரூபா 260/-) இருநூற்றி அறுபது ரூபா வாழ்க்கைச் செலவுப் படி வழங்குவது தொடர்பான அறிக்கையொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திருமதி அமரா பியசிலி இரத்நாயக்க சென்ற வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையிலேயே இப்படிக் கூறிய இராஜாங்க அமைச்சர் இந்த விடயம் அமைச்சரவையின் அவதானத்தைப் பெறும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

ஓய்வூதியர்களுக்கு இந்த 260 ரூபா படி எப்போது கொடுக்கப்படும்? இதற்கான திகதியை குறிப்பிட முடியுமா என திரு. தினேஷ் குணவர்த்தன கேட்ட பொழுது அது பற்றிக் கூறும் நிலையில் தாம் இல்லையென திருமதி இரத்நாயக்க கூறினார்.

இவ்விடயத்தில் மேலும் பேசிய திரு. தினேஷ் குணவர்த்தன 1988 டிசம்பர் மாதத்திலேயே ஓய்வூதியர்களுக்கு இந்த 260 ரூபா வழங்குவது பற்றி அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த விடயம் பற்றி பல தடவைகளில் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின் மூன்று முறை வழங்கப்பட்ட விசேட வாழ்க்கைப் படி 300 ரூபா, 200 ரூபா, 100 ரூபா ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது ஆனால் 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படியைப் பொறுத்தவரை சேவையிலுள்ள ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற போதும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படிகள் எல்லாம் மாதாந்தம் 3000 ரூபாவுக்கு மேற்படாத சம்பளம் அல்லது ஓய்வூதியம் பெறுபவர்களுக்கே செலுத்தப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பரந்தனைக் கைப்பற்றுவதே இராணுவத்தின் நோக்கமாம்

பரந்தன் பகுதியைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இராணுவம் முயற்சியெடுத்துள்ளதாம்.

இவ்வாறு இராணுவ வட்டாரங்களை ஆதாரங்காட்டிக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பரந்தனைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதன் மூலம் இளவாலி கடலேரிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த முடியுமென இராணுவம் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுள்ளது.

# தமிழ்த்தின விழாவை பகிஷ்கரிக்க முடிவு

கண்டியில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழாவினை மத்திய மாகாண கல்வி அமைச்சரும் மேற்படி சபையின் ஆளும், எதிர்க் கட்சித் தமிழ் உறுப்பினர்களும் பகிஷ்கரிப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணமெதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை.

# ஏழு மாதங்களின் பின் சடலங்கள் வந்தன

சவுதி அரேபியாவில் 15-12-91 அன்று கார் விபத்தில் கொல்லப்பட்ட இரு இலங்கையர்களின் சடலங்களை கடந்த வாரம் கொழும்பு வந்து சேர்ந்தன.

இவ்விரு இலங்கையர்களும் சவுதியிலிருந்து சூடானை நோக்கி சென்றுகொண்டிருக்கையில் ஒட்டகம் ஒன்றின் மீது மோதி இவர்கள் சென்ற கார் விபத்துக்குள்ளானது.

# வணிகதனக்கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணக் கல்விக்கோட்ட வணிகவியற் பிரிவு நடாத்திய வணிகதினக்கட்டுரைப் போட்டியில் (1991) வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவை வருமாறு:-

உயர்தர வகுப்பு: (12 ஆம் 13 ஆம் ஆண்டு):-

முதலாமிடம் - செல்வி செ. ஜெயகௌரி கொக்குவில் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம்- செல்வன் கு. ஆனந்த வைத்தீஸ்வர வித்தியாலயம், மூன்றாமிடம் - செல்வன் க.சுதன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

திறமைச் சான்றிதழ் பெறுவோர்:

செல்வன் சி. பேரின்பராசா கொக்குவில் இந்துக் கல்லூரி, செல்வி பா. நளாயினி யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி செல்வன் டபிள்யூ. சிறிவெல்ரர் புனித பத்திரிசியார் கல்லூரி, செல்வி கே. சிவாஜினி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, செல்வன் க.கிருஷ்ணகுமார் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, செல்வி ரி. பிறேமினா வேம்படி மகளிர் கல்லூரி, செல்வி இ. றஜனி திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலப்பாடசாலை, செல்வி என் நளாயினி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

சாதாரணதர வகுப்பு: (10 ஆம் 11ஆம் ஆண்டு):

முதல மிடம் - செல்வன் ஜீ இன்பசீலன், புனித பத்திரிசியார் கல்லூரி, இரண்டாமிடம் -செல்வி கி ஜோலன்டா மாறி திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கிலப்பாடசாலை. மூன்றாமிடம் - செல்வன் இ. தேவகுமாரன் வைத்தீஸ்வர வித்தியாலயம்.

திறமைச் சான்றிதழ் பெறுவோர்:-

செல்வி ப. குயின்ரா நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை, செல்வி பா மதிவதனி புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம், செல்வி க. சுஜனிதா சண்டிலிப்பாய் மகளிர் கல்லூரி, செல்வன் வீ. சுந்தரன் பரியோவான் கல்லூரி, செல்வி இ கவிதா வேம்படி மகளிர் கல்லூரி, செல்வி அ. கரோலின் தேனியா புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம், செல்வி ஞா. மேரி மார்ஜ் நாவாந்துறை றோ. க. த. க, பாடசாலை.

# தாண்டிக்குளத்தில்கடமையிலிருந்த நான்கு பொலிஸார் கைது!

தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் கடமையிலிருந்த நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் வவுனியா பொலிஸ் உயரதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட பொருள்களை தடை முகாம் வழியாக கடத்திச் செல்ல அனுமதித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெருமளவு பற்றறிகள், கற்பூரம், வாகன உதிரிப் பாகங்கள் என்பனவற்றை எடுத்துச் செல்ல இவர்கள் அனுமதித்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நால்வரில் மூவர் றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள், ஒருவர் நிரந்தர பொலிஸ் சேவையிலுள்ளவர்.

இந்த நால்வரும் தற்பொழுது இரகசியப் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## மீனவர்கள் விடுதலை

ஸ்ரீ லங்கா கடற்படையினர் பருத்தித்துறைக்கடலில் வைத்துக் கைது செய்து கட்டைக்காடு இராணுவத்தினரிடம் ஒப்படைத்த இருமீனவர்களும் யாழ் அரச அதிபரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த அ. விஜயராஜா (18) ஐ சிவநேசசிங்கம் (19) ஆகிய இந்த இரு மீனவர்களும் பருத்தித்துறைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் கடந்த 6 ஆம் திகதி ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். 11

## பதுக்கலைத் தடுக்க கோரிக்கை

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் அத்தியாவசியப் பொருள் பதுக்கலை சனசமூக நிலையங்கள் விழிப்புடன் செயற்பட்டு அவற்றைத் தடுக்க முன்வரவேண்டுமென்று யாழ், மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் கேட்டுள்ளார். 14

## ஜனநாயகக் கட்சி கின்ரனை நிறுத்தும்

அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக ஜனநாயகக் கட்சி தனது வேட்பாளராக ஆர்கன்ஷா மாநில ஆளுநர் கிளிட்கின்ரனை நியமித்துள்ளது.

நியூயோர்க்கில் கட்சியின் மாநாட்டில் நேற்று முன்தினம் இம் முடிவு எடுக்கப்பட்டது.

அண்மையில் நடத்தப்பட்ட அபிப்பிராயக் கணிப்புக்களில் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ச் புஷ்ஷை விட இவர் அதிகப் படியான புள்ளிகளைப் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தபால் விநியோகம்

இராணுவ நடவடிக்கை காரணமாக தற்போது பண்டத்தரிப்பு தபால் அலுவலக கட்டிடத்தில் இயங்கிவரும் இளவாலை மாரீசன் கூடல் உபதபால் நிலையங்களில் அண்மையில் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு உள்நாட்டு கடிதங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இளவாலை, மாரீசன் கூடல் பகுதிகளை சேர்ந்த மக்கள் தங்களுக்கான கடிதங்களை இங்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. 13

# பொருள்களின் விலைகளை அதிகரிப்பதில் போட்டி

தற்போதைய சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு வர்த்தகர்கள் பொருள்களின் விலைகளை படிப்படியாக கூட்டுவதில் ஈடுபடுவதாகமக்கள் முறைப்படுகிறார்கள்.

அத்தியாவசியப் பொருள்களான அரிசி, சீனி என்பவற்றின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன.

அரிசி ஆலைகளில் கிலோ 25 ரூபாவாக விற்பனையான அரிசி 30 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. சீனி தனியார் கடைகளில் கிலோ 30 ரூபாவுக்கு விற்கப்படும் அதே வேளையில் அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம் கிலோ 27 ரூபாவாக விற்றுவந்த சீனியை திடீரென 33 ரூபாவாக உயர்த்தியுள்ளது. இங்கு குத்தரிசி கிலோ 23 க்கு பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்படுகிறது.

ப.நோ.கூ. சங்கமும், தனியார் வர்த்தகர்களும் போட்டி போட்டுக்கொண்டு பொருள்களின் விலைகளை அதிகரிக்க முயல்வதால் மக்கள் சிரமத்துக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (43)

# பதுக்கிய பொருள்கள் பகிரங்க விற்பனை!

சவர்க்காரம் தேங்காய் எண்ணெய் போன்ற பொருள்களை மக்களுக்கு விற்காது பதுக்கி வைத்திருந்த அச்சுவேலிப் பகுதி வர்த்தகர்களிடமிருந்து தமிழீழ காவல்துறையினர் இவற்றைக் கைப்பற்றி மக்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்தனர்.

இதனைக் கண்ணுற்ற ஏனைய கடைக்காரர்களும் தாம் வைத்திருந்த சவர்க்காரங்களையும் தேங்காய் எண்ணெய்யையும் மக்களுக்கு தாமே முன்வந்து விற்பனை செய்ததையும் காண முடிந்தது.

ஆவரங்கால் பகுதியிலும் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட சவர்க்காரங்கள் கட்டுப்பாட்டு விலையில் இப்பகுதி மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. (43)

# லொக்கர்பை விமானக் குண்டு வெடிப்பு 'பான் ஆம்' குற்றவாளி

ஸ்கொட்லாந்தின் லொக்கர்பை பகுதிக்கு மேல் குண்டு வெடிப்புக் காரணமாக வெடித்துச் சிதறிய விமானத்தின் கம்பனியான பான் ஆம் நிறுவனம் வேண்டுமென்றே தவறிழைத்ததற்குக் குற்றவாளியென அமெரிக்க நீதிமன்றமொன்றின் ஜூரர்கள் தீர்ப்பளித்துள்ளனர்

இவ் விமானக்குண்டு வெடிப்பு காரணமாகக் கொல்லப்பட்ட 270 பேர்களின் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் முப்பது கோடி டொலர்கள் நஷ்டஈடு கோரி பான் ஆம் நிறுவனத்துக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கிலேயே இவ்வாறு ஜூரர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது.

சர்வதேச சட்டப்படி வேண்டுமென்றே கவனயீனமாகவிருந்ததாக நிரூபிக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் 75000 டொலர்கள் நஷ்டஈடாக வழங்கவேண்டும்.

விமானத்தில் குண்டு வைக்கப்பட்டதை கண்டுபிடிக்கத் தவறியதின் மூலம் பான் ஆம் நிறுவனம் கவனயீனக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளது. பயணிகள் பாதுகாப்பிலும் பார்க்க தனது நிதிப்பிரச்சினைகளிலேயே அது கவனம் செலுத்தியது என்று மனுதாரர்கள் தமது புகாரில் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

இந்த குண்டு வெடிப்புக்கு இரண்டு லிபியர்களே பொறுப்பு என்று அவர்களை நாடுகடத்தும்படி பிரிட்டனும், அமெரிக்காவும் லிபியாவை வற்புறுத்துவதும் அதற்கு இணங்காததால் ஐ.நா, லிபியாவுக்கு எதிராக வான்வழித் தடை அமுல் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# புலிகளுடன் இந்தியா பேசக்கூடாது என்கிறார் இவர்

விடுதலைப்புலிகளுடன் இந்தியா பேசக்கூடாதென தமிழக சட்டமன்றத்தின் இந்திரா காங்கிரஸ் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இந்திய மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை புலிகள் நிராகரித்தமையையும் இதற்கான ஒரு காரணமாகக் காட்டியுள்ளார். பாலசுப்பிரமணியம்.

# இணைப்புப் பல்கலைக்கழக கல்லூரி பேயாடி கூழாங்குளத்தில் அமையும்

வடமாகாண இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரிக்கென நிரந்தர கட்டிடமொன்றை அமைப்பதற்காக வவுனியா பேயாடி கூழாங்குளம் பகுதியில் 100 ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இவ்விடத்தை நேரில் சென்று பார்வையிட்ட கல்லூரி அதிகாரிகளின் இப்பரிசை கல்லூரியின் முகாமைத்துவக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

# 8 தமிழ் இளைஞர்கள் திருமலை நகரில் கைது

கடந்த புதனன்று திருகோணமலை நகரில் 8 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நகரில் வசிப்பதான அனுமதி அட்டை இவர்களிடம் இருக்கவில்லை என்று கூறியே இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

எனினும் இளைஞர்களை கைது செய்த பொலிஸார் அவர்களிடமிருந்த அட்டைகளை பறித்து கிழித்து எறிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் திருமலை ஜி. பி எஸ் இராணுவ முகாமிற்கு அனுமதி அட்டைபெற சென்ற பலர் படையினரால் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கப்பலில் செல்பவர் குறித்து பணிப்பாளர் விளக்கம்

கொழும்பு செல்லும் பொழுது தனக்கு உதவியாகவும் வண்டில்களை ஏற்றி இறக்கவுமே ஓர் ஆசிரியரை தான் அடிக்கடி கப்பலில் கூட்டி செல்வதாக யாழ் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

கல்வி அதிகாரிகளை கப்பலில் கூட்டி செல்வது தொடர்பாக அவரிடம் கேட்ட பொழுது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆசிரியர் கடமை லீவுடன் கப்பலில் கொழும்புக்கு சென்று வருவதாகவும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 47

# பிறப்பு சான்றிதழ் சகலரும் பெற நடவடிக்கை

யாழ் மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு விவாகச் சான்றிதழ்கள் பெற வருவோரின் தொகை அதிகரித்த இவ்வேளையில் அலுவலக நேரத்தில் விண்ணப்பதாரிகளின் தொல்லை குறைந்துள்ளதாக செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஒரு விண்ணப்பதாரி ஒரு சான்றிதழ் பெற மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்ற கட்டுப்பாட்டைத் தொடர்ந்தே இந்த நிலையேற்பட்டுள்ளது.

அவசிய தேவைகள் சம்பந்தமான பத்திரங்களைச் சமர்ப்பித்தால் ஒன்றுக்கு மேலான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுவருகின்றன.

மேலதிக பதிவாளரின் இந்த நடவடிக்கையால் பல விண்ணப்பதாரிகள் நாள்களின் தொல்லையின்றி சான்றிதழ்களைப் பெற்று வருவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

# குடியேற்றங்களை நிறுத்தும் இஸ்ரேல் அறிவிப்பு

இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த மேற்கு கரையோரப் பகுதிகளில் இனி புதிதாக யூத குடியேற்றம் எதுவும் அமைக்கப்போவதில்லை என அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் புதிய வீடமைப்புத்துறை அமைச்சர் நேற்று இவ்வறிவிப்பில் கைெயழுத்திட்டார். தேர்தல் விஞ்ஞாபனத்தில் குடியேற்றம் இனிமேலும் தொடராது என அறிவித்தே தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெற்றிருந்தது.

இவ்வறிவிப்பை எகிப்து வரவேற்றுள்ளது. இதனிடையே புதிய இஸ்ரேல பிரதமர் ராபின் அடுத்தவாரம் எகிப்து செல்லவுள்ளார்.

உ

ஓம் சக்தி

சாவகச்சேரி

அருள்மிகு

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மஹோற்சவ விழா

அன்புடையீர்!

கீழ்வரும் கால அட்டவணைப்படி மேற்படி ஆலய மஹோற்சவ விழா நடைபெறவுள்ளது.

கொடியேற்றம்: 20 7—92 திங்கள் மு ப 10 ம

சித்திரத்தேர்; 28—7—92 செவ்வாய் மு ப 10 ம

தீர்த்தத்திருவிழா: 29—7—92 புதன் மு ப 10 ம

பூங்காவனம்: 30—7—92 வியாழன் பி ப 4 ம

ஆடிப்பூரத் திருவிளக்குப் பூஜை (சுமங்கலி பூஜை)
01—8—92 சனி பி ப 3 மணி

குறிப்பு:- மஹோற்சவம் பத்து நாட்களும் உபயம் அனுஷ்டிப்போரும், ஆடி பூரம் சுமங்கலிப் பூஜை (திருவிளக்கு) பூஜையில் பங்கு கொள்ளுவோரும் முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா
(ஆலய தர்மகர்த்தா)

07019

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்ஷமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 17-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கு

# மாதாந்த சேவைப்படியாக 500 ரூபா வழங்க முடிவு

யாழ் மாவட்டத்தில் இயங்கும் சகல சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களையும் பாடசாலை மேற்பார்வைக்காக ஐந்து நாளும் விடுவிக்கப்பட வேண்டுமென கல்வியமைச்சு சுற்றுநிருபமூலம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கு இதற்கான மாதாந்த சேவைப்படியாக ஐந்நூறு ரூபா வழங்கப்படுமெனவும் அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு மூன்று நாள்கள் பாடசாலையில் இருந்து வகுப்புப்பாட வழிகாட்டுவதற்காக விடுவிக்கப்பட்ட இவர்கள் பின்பு ஐந்து நாள்களும் பாடசாலைகளில் கடமை புரியுமாறு பணிக்கப்பட்டனர்.

அண்மையில் திங்கட்கிழமைகளில் மட்டும் மேற்படி கடமைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தும் தற்போதைய சுற்று நிருபம் ஐந்து நாள்களும் வழிகாட்டல் கடமை புரியப்பணித்துள்ளது.

இதன் காரணமாக பாடவேலைகள் ஒழுங்காக மேற்பார்வை செய்யப்படுமெனில் சில பாடசாலைகளில் மோசமான ஆசிரிய பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புண்டு எனவும் கல்வி வட்டாரங்கள் கருதுகின்றன. 20

## பொதுமக்களுக்கு விநியோகம்

பதுக்கல் வியாபாரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தேங்காய் எண்ணெய் சவர்க்காரம் என்பன நேற்று காவல்துறையினரால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

யாழ் புனித அடைக்கல மாதா தேவாலய முன்றலில் வைத்து இவை குடும்ப அட்டைக்கு விநியோகிக்கப்பட்டன. 07

## திருநாவுக்கரசு...

தாக குற்றஞ்சாட்டப்பட்டு இவர் நேற்று கைது செய்யப்பட்டார்,

எனினும் இவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி இவர் 1947 லஞ்ச ஊழல் தடுப்புச்சட்டத்தின் கீழேயே கைதாகியுள்ளார் எனவும் ஆனால் 1988 இல் இச்சட்டம் திருத்தப்பட்டு விட்டது எனவும் இதனால் பழைய ஒரு சட்டத்தின் படி தடுத்து வைக்க முடியாது எனவும் கூறி திருநாவுக்கரசை விடுதலை செய்தார்.

எம். ஜி ஆர் அமைச்சரவையில் முன்னர் அமைச்சராக இருந்த திருநாவுக்கரசு தனது கைது குறித்து பின்னர் கருத்துத் தெரிவித்த போது. " இது அரசியல் நோக்கம் கொண்டது. அ. தி. மு க அரசை நான் குறை கூறுவதை தடுக்கவே இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டது" என்றார்.

திருநாவுக்கரசை கைதுசெய்ய எடுத்த நடவடிக்கையை கண்டித்துள்ள மார்க்ஸிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி என்பன இது எதிர்க்கட்சிகள் மீதான பழி வாங்கல் என சுட்டிக் காட்டியுள்ளன.

## யாழ், பிரதம...

யாழ் குடாநாட்டில் போக்குவரத்து துண்டிக்கப்படும் இவ்வேளையில் மக்கள் தமது தபால்களை கப்பலின் மூலம் அனுப்புவதில் பெரும் ஆர்வம் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

யாழ் தபால் திணைக்கள அதிகாரிகள் மக்களுக்கு முன் கூட்டியே தபால்களைச்சேர்க்குமாறு அறிவித்ததையிட்டு பல பொது ஸ்தாபனங்கள் பாராட்டியுள்ளன. 06

## சர்வதேச ..

செஞ்சிலுவை சங்கம் தங்கள் தலைமையகத்தில் ஏற்பட்ட தவறுக்கு வருந்துவதாக தெரிவித்தனர்

அத்துடன் அரசாங்க அதிபருக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மன்னிப்பும் கேட்டுக்கொண்டனர்.

இன்று புறப்படவுள்ள குமண கப்பலில் அரசாங்க அதிபரை அழைத்துச் செல்வதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகவும் அரசாங்க அதிபரிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்

முன்னதாக இவரின் பயண அனுமதி மறுப்புக்கு கூட்டுப்படை தலைமையகமே காரணம் என கூறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. 06,47

# 1983 முதல் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு நட்டஈடு

1983 ஆம் ஆண்டில் இருந்து இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளன;

இதன்படி யாழ் மாவட்டத்திலும் 1983 முதல் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கும் இது கிடைக்கவுள்ளது

இதுவரை காலமும் 1987 ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கே இந்த நட்ட ஈடு கிடைத்தது

இந்த நட்ட ஈட்டை வழங்குவதற்கு யாழ் அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சுடன் பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது 47

# யாழ் உதவி அரச அதிபர் பிரிவு உதைபந்தாட்டப் போட்டி

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இறுதிக் கட்டத்தை அண்மித்துள்ளது.

நேற்று சென்பற்றிக்ஸ கல்லூரி மைதானத்தில் இப்போட்டித் தொடரில் இடம்பெற்ற அரை இறுதிப்போட்டிகளில் முதலில் இடம்பெற்ற போட்டியில் பாஷையூர் சென் அந்தனீஸ அணி அதனை எதிர்த்து ஆடிய சென் மேரிஸ அணியை 2;1 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற இன்னொரு அரை இறுதிப்போட்டியில் குருநகர் பாடுமீன் அணி நாவாந்துறை சென்நீக்கலஸ் அணியை 2:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

அரை இறுதிப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாஷையூர் சென் அந்தனீஸ அணியும் குருநகர் பாடுமீன் அணியும் இன்று மோதவுள்ளன.

இவ்வருடத்தில் இடம் பெற்ற பல்வேறு போட்டிகளில் இவ்விரு அணிகளும் முன்பு மூன்று தடவைகள் இறுதிப்போட்டியில் மோதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 16

# கரை ஒதுங்கிய சடலம் இந்திய மீனவருடையதா?

அரியாலை மணியம் தோட்ட கடற்கரையில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய சடலம் இந்திய மீனவராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது

இச்சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்கு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கச்சதீவுக் கடல் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் இந்திய மீனவர் மீது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவரைக் காணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

அதில் ஒருவரது சடலமாக இது இருக்கலாம் எனவும் இப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். 07

# மருத்துவ, பொறியியல கல்வியை தமிழில் பயில ஏற்பாடு

தமிழைப் போதனா மொழியாகக் கொண்டு பொறியியல் கல்லூரி ஒன்றையும் மருத்துவக்கல்லூரி ஒன்றையும் ஆரம்பிக்க தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் முடிவெடுத்துள்ளது.

பொறியியல் கல்லூரி முதலில் தொடங்கப்படுமெனவும் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவக்கல்வியை முழுமையாகத் தமிழில் போதிப்பதற்கு ஏதுவாக தற்பொழுது தமிழில் மருத்துவ நூல்களை மொழிபெயர்க்கும் பணிகள் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மாகாண அமைச்சின் அனுமதியின்றி நியமனம்

கல்வி அமைச்சினால் அண்மையில் யாழ் மாவட்ட வளர்ந்தோர் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றவரின் நியமனம் மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரமில்லாது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அது செல்லுபடியற்றதாகவும் அவரின் நியமனத்தை மாகாணக் கல்வி அமைச்சு நிர்வாக பகுதி கடமையில் ஏற்றுக் கொள்ளாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சு இதேபோன்ற நியமனத்துக்காக இதனை மேற்கோள் காட்டி விண்ணப்பித்த வேறொருவரின் விண்ணப்பத்திற்கு நிராகரித்துப் பதில் அனுப்பும் போதே இவ்விடயமும் குறிப்பிடப்பட்டுள்ளது 56